# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படம் திறப்பு







மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் அவர்கள் **02.08.2021** அன்று தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு, சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்கள். இவ்விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. மு. அப்பாவு, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சஞ்சிப் பானர்ஜி, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. கு. பிச்சாண்டி, நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள், தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
# முற்றம்
விலை ரூ.15 மலர் 23 இதழ் 4 ஆகஸ்டு 2021

கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. **ம.பல்லவி பல்தேவ்,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

தலைமை செயல் அலுவலர் (பொ)
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
**எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
திருமதி. **சி. சுஜாதா ஜேக்கப்,** கூடுதல் இயக்குநர்,
**ஜே. கணேஷ் கண்ணா,** கூடுதல் இயக்குநர்,
திருமதி. **எஸ்.கவிதா,** கூடுதல் இயக்குநர்,

நிர்வாக ஆசிரியர்
திருமதி. **ரா. ஜீவா,** பொது மேலாளர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

நிதி நிர்வாகம்
திருமதி. **சு. இராமலெட்சுமி,** நிதி ஆலோசகர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
முதுநிலை கணக்காளர் : திருமதி. **சு. சசிகலா**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**

கணினி வடிவமைப்பு
**ஸ்ரீ மூகாம்பிகை ஹைடெக் பிரிண்ட்ஸ்**

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**
'முற்றம்',
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412

**முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.**



## குறளும்-பொருளும்

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு.**

அன்பு இல்லாதவர், எல்லாம் தமக்கே என உரிமை கொண்டாடுவர்;
அன்பு உடையவரோ தம் உடல், பொருள், ஆவி ஆகிய
அனைத்தும் பிறருக்கென எண்ணிடுவர்.

## உள்ளே...

| | |
|---|---|
| 75வது சுதந்திர தின வைரவிழா கொண்டாட்டம் | 06 |
| மகளிர் குழுக்களுக்கு ரூ. 20,000 கோடி வங்கி கடன் 2021-22-ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு | 08 |
| ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறைக்கு பாராட்டுச் சான்றிதழ் | 11 |
| சுய உதவிக் குழுக்கள் மேற்கொண்டு வரும் வாழ்வாதார நடவடிக்கைகள் பார்வையிடல் | 16 |
| மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குதல் | 21 |
| தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் | 31 |
| தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் | 36 |
| தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் | 39 |

**twitter**

“ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்கள் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர் கணக்கில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். ”

# மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தமிழக சுய உதவிக் குழுக்களின் நெகிழி சுழற்சி முயற்சியினை காணொலி காட்சி வாயிலாகக் கலந்துரையாடி பாராட்டினார்கள்.









மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் 12.08.2021 அன்று சுய உதவிக் குழு உறுப்பினர்களுடன் காணொலி வாயிலாக மகளிரின் தற்சார்பு குறித்து கலந்துரையாடினார். தேசிய அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து சுய உதவிக் குழுக்களில் தமிழ்நாட்டிலிருந்து, திண்டுக்கல் மாவட்டம், என். பஞ்சம்பட்டி ஊராட்சியில் சுய உதவிக் குழுவினரால் நடத்தப்படும் நெகிழி மறு சுழற்சி மையத்தினைச் சேர்ந்த திருமதி. ஜெயந்தியுடன் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் காணொலியில் கலந்துரையாடினார்கள்.



இக்கலந்துரையாடலில், தமிழ்நாட்டிலிருந்து மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், ஊரக வளர்ச்சித்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் K.கோபால், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழ்நாடு முழுவதும் 4,459 இடங்களில் இருந்து அரசு உயர் அலுவலர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் 18 இலட்சத்திற்கு மேலான சுய உதவிக் குழு உறுப்பினர்கள் இக்காணொலி காட்சியினைப் பார்த்து பயன் பெற்றனர்.

# 75வது சுதந்திர தின வைரவிழா கொண்டாட்டம்






மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.08.2021 அன்று 75வது சுதந்திர தினத்தை நினைவுகூறும் வகையில் சென்னை, காமராஜர் சாலை மற்றும் சிவானந்தா சாலை சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ள இந்திய சுதந்திர தின வைரவிழா நினைவுத் தூணை திறந்து வைத்தார்











மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 75வது சுதந்திரத் திருநாளையொட்டி 15.08.2021 அன்று சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் காவல்துறை மரியாதையை ஏற்றுக்கொண்டு சுதந்திர திருநாள் சிறப்புரையாற்றினார்.

# 75வது சுதந்திர தின வைரவிழா கொண்டாட்டம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 75வது சுதந்திரத் திருநாளையொட்டி 15.08.2021 அன்று சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.



15.08.2021 அன்று சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுடன், டாக்டர் அ.ப.ஜெ.அப்துல் கலாம் விருது, கல்பனா சாவ்லா விருது, முதலமைச்சரின் சிறப்பு விருது மற்றும் பல்வேறு துறைகளில் தமிழ்நாடு அரசின் விருதுகளையும், பதக்கங்களையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் பெற்றவர்கள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். உடன் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் உள்ளார்.

# "20,000 கோடி ரூபாய் வங்கிக் கடன்"

## 2021-22-ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் மகளிர் குழுக்களுக்கு மகத்தான அறிவிப்பு





சென்னை, கலைவாணர் அரங்கத்தில் 13.08.2021 அன்று நடைபெற்ற தமிழக சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசின் 2021–2022 ஆம் ஆண்டிற்கான காகிதமில்லா நிதிநிலை அறிக்கையினை மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் ராஜன் அவர்கள் தாக்கல் செய்தார்.

மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களின் வாழ்வாதாரத்தை வளமுள்ளதாக மாற்றும் வகையில் பல்வேறு பயன்மிகு அறிவிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றுள்ளன.

அனைத்து தரப்பினரும் பொருளாதார ஏற்றம் பெறவும், தொழில் துறைகள் வளர்ச்சி பெற்றிடவும், ஏழ்மை அகன்றிடவும், கல்வி அறிவு பெருகிடவும், சுகாதாரம் மேம்படவும், கிராமங்கள் தன்னிறைவு அடையவும் பல்வேறு அம்சங்களைக் கொண்ட இந்த காகிதமில்லா நிதி நிலை அறிக்கையில் சுய உதவி குழு மகளிரின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியத்துவம் தரும் ஆக்கப்பூர்வமான அறிவிப்புகளில் சில கீழ்வருமாறு.

- **தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டம் புதுப்பிக்கப்பட்டு 1 லட்சம் சுய உதவிக் குழுக்கள் பயன்பெறும் வகையில் ரூ.809.79 கோடி செலவில் 2021–22–ம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.**
- **நடப்பு ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகளின் உதவியுடன் ரூ.5,500 கோடி சிறப்பு கொரோனா கடன் உள்பட ரூ.20 ஆயிரம் கோடி கடன் உறுதி செய்யப்படும்.**
- **தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் சீரமைக்கப்பட்டு 2021–22–ம் ஆண்டில் மொத்தம் ரூ.212.69 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.**
- **கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.2,756 கோடி தள்ளுபடி செய்யப்படும்.**

சுய உதவிக் குழு மகளிரின் வாழ்வாதார வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புகளால் சுய உதவிக் குழு இயக்கம் மேலும் மேலும் வளர்ச்சி பெறும் என்பது திண்ணம்.

# மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்



பொதுமக்களின் வீட்டிற்கே நேரடியாகச் சென்று தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகளை செய்தல், தேவைப்படும் மருந்துகளை வழங்குதல், இயன்முறை சிகிச்சை, இயலா நோயாளிகளுக்கு வழங்கக் கூடிய வலி நிவாரண மருந்துகள், ஆதரவு சிகிச்சை உள்ளிட்ட மருத்துவச் சேவைகளை அளிக்கும் மக்களைத் தேடி மருத்துவம் என்ற திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 05.08.2021 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரியில் தொடங்கி வைத்தார்கள்.

இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்ட அதே நேரத்தில் மதுரை, கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி மற்றும் சென்னை ஆகிய 7 மாவட்டங்களிலும் காணொலிக் காட்சி வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர்.காந்தி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. Y. பிரகாஷ், திரு. டி.மதியழகன் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் டாக்டர் தாரேஸ் அகமது, இ.ஆ.ப., கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் வி.ஜெயச்சந்திர பானுரெட்டி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மகளிர் சுய உதவிக்குழுக்களின் பங்கு :

இத்திட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த பயிற்சி பெற்ற பெண் சுகாதார தன்னார்வலர்கள், இடைநிலை சுகாதாரச் சேவையாளர்கள், இயன்முறை மருத்துவர்கள், நோய் ஆதரவு செவிலியர்கள் ஆகியோர் பங்கு பெறுவர்.





# ஊரகப் பகுதிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை விரைந்து மேம்படுத்திட வேண்டும் என ஊரக வளர்ச்சித்துறை ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தல்



ஊரக வளர்ச்சித் துறையின் செயல்பாடுகள், துறை மூலம் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டப் பணிகளின் முன்னேற்றம், புதிதாக செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள் ஆகியவை குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 08.07.2021 அன்று தலைமைச் செயலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊரகப் பகுதிகளிலும் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் எவ்வித குறைபாடுமின்றி முழுமையாக கிடைக்கச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மூன்றடுக்கு ஊராட்சிகளின் செயல்பாடுகள், கிராம ஊராட்சிகளால் செயல்படுத்தப்படும் குடிநீர் விநியோகத் திட்டங்கள், தெரு விளக்குகள் பராமரிப்பு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் நிறைவேற்றப்படும் அடிப்படை வசதிகளுக்கான திட்டங்கள், ஜல்ஜீவன் மிஷன், பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டம், ஊரகத் தூய்மை பாரத இயக்கம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

ஊரக வளர்ச்சித் துறை மூலம் செயல்படுத்தப்படும் ஊரக சாலைகள் மற்றும் உட்கட்டமைப்புத் திட்டங்களான பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம், நபார்டு உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி திட்டங்கள், தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டம் ஆகிய திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும், தேவைப்படும் இடங்களில் பாலங்கள் கட்டுதல் மற்றும் சாலைகள் அமைக்கும் திட்டங்களை வருங்காலங்களில் செயல்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு வாழ்வாதாரத் திட்டங்களான, தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டம் குறித்தும், சுய உதவிக் குழுக்கள் மூலம் ஊரக வாழ்வாதார மேம்பாடு குறித்தும், பல்வேறு திட்டப் பணிகளை ஒருங்கிணைத்து, வாழ்வாதார திட்ட செயல்பாடுகள் மூலம் தற்சார்பு பெற்ற கிராமங்களை உருவாக்க வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி தலைமை இயக்குநர் (பயிற்சி) / கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ ரகுநந்தன், இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ச.கிருஷ்ணன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் Dr.K. கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையில் பெறப்பட்ட மனுக்கள் மீது தீர்வு காண்பதில் சிறப்பாக செயல்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு பாராட்டுச் சான்றிதழ்






மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 14.08.2021 அன்று தலைமைச் செயலகத்தில், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையில் பெறப்பட்ட மனுக்கள் மீது தீர்வு காண்பதில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பங்களிப்பினைப் பாராட்டி, ஊரக வளர்ச்சித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் K. கோபால், இ.ஆ.ப., அவர்களிடம் பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார்கள். இந்நிகழ்வின் போது, மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரை முருகன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையின் சிறப்பு அலுவலர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

# ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை சிறப்பாக செயல்படுத்த மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தல்






மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் சென்னை, சைதாப்பேட்டை பனகல் மாளிகையில் அமைந்துள்ள ஊரக வளர்ச்சித் துறை அலுவலகத்தில் காணொலி காட்சி வாயிலாக அனைத்து மாவட்டங்களின் கூடுதல் ஆட்சியர்கள் (வளர்ச்சி) / திட்ட இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் (ஊராட்சி) மற்றும் அனைத்து அலுவலர்களிடமும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களின் ஊரக வளர்ச்சி முகமை மற்றும் ஊராட்சிகள் மேம்பாடு சார்ந்த பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார்.

இக்காணொலி ஆய்வுக் கூட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் Dr. K.கோபால், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயரதிகாரிகள் பங்கேற்றனர்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 07.08.2021 அன்று சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள இந்து சமய அறநிலையத்துறை தலைமையிட வளாகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவாக ஒரு இலட்சம் தலமரக்கன்றுகள் நடும் திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கொரோனா விழிப்புணர்வு தொடர் பிரச்சார துவக்க விழாவில் கொரோனா உறுதிமொழி ஏற்பு




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 31.07.2021 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில், கொரோனா பெருந்தொற்றுப் பரவலை தவிர்க்கும் நோக்கில் தமிழ்நாடு அரசின் கொரோனா விழிப்புணர்வு தொடர் பிரச்சார துவக்க விழாவில், கொரோனா உறுதிமொழி ஏற்கப்பட்டது. இந்த விழாவில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / முதன்மைச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சிறப்பு பணி அலுவலர் / முதன்மைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இலவச கோவிட் தடுப்பூசி செலுத்தும் சேவை தொடக்கம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 28.07.2021 அன்று சென்னை, காவேரி மருத்துவமனையில், இந்திய தொழிற்கூட்டமைப்பு மற்றும் தனியார் மருத்துவமனைகள் இணைந்து, தனியார் நிறுவனங்கள் மற்றும் தனியார் மருத்துவமனைகளின் கூட்டாண்மை சமூக பங்களிப்பு நிதியின் மூலம் நடத்தும் இலவச கோவிட் தடுப்பூசி செலுத்தும் சேவையினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் என். எழிலன் மற்றும் திரு. த. வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / முதன்மைச் செயலாளர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து துறை இயக்குநர், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்தல் குறித்த பன்னாட்டு மாநாடு







மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 06.08.2021 அன்று சென்னை, தரமணி, எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற "கால நிலை மாற்றம் மற்றும் கொரோனா தொற்று நோயின் பின்னணியில் உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்தல்" குறித்த பன்னாட்டு மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். இம்மாநாட்டில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன், எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் நிறுவனத் தலைவர் பேராசிரியர் எம்.எஸ்.சுவாமிநாதன், தலைவர் முனைவர் மதுரா சுவாமிநாதன், நிர்வாக இயக்குநர் முனைவர் கே.எஸ்.முரளி, தி இந்து குழுமத்தின் தலைவர் திரு. நா.ராம், சூழியல் தொழில்நுட்ப மைய இயக்குநர் முனைவர் ரப.ரெங்காலட்சுமி, இணையவழியாக உலக உணவுத் திட்ட – காலநிலை பேரழிவு அபாயக் குறைப்புத் திட்ட தலைவர் திரு. ஜெர்னாட் லகாண்டா, International Crops Research Institute for the Semi-Arid Tropics நிர்வாக இயக்குநர் முனைவர் ஜாக்குலின் டி.அரோஸ் ஹியூஸ் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொண்டனர்.

# கொரோனா தொற்று தடுப்பு பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம்




கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் தலைமையில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி ஆகியோர் முன்னிலையில் கொரோனா தொற்று தடுப்பு பணிகள் தொடர்பாக, ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் Dr.K.கோபால், இ.ஆ.ப., கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.எஸ்.நாகராஜன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித்துறை ஆணையர் முனைவர். கே. எஸ். பழனிசாமி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் இயக்குநர் திரு.அமித் குஷாவா, இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஊரக வளர்ச்சித் துறையின் திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம்




மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் 14.07.2021 அன்று தென்காசி மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் மகளிர் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு நடத்தினார். ஆய்வினைத் தொடர்ந்து மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வுகளின் போது, ஊரக வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் Dr. K. கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப.,, ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். கோபால சுந்தரராஜ், இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# ஊரக வளர்ச்சித் துறையின் திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம்



மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் தலைமையில் 03.07.2021 அன்று சென்னை, சைதாப்பேட்டை பனகல் மாளிகையில் அமைந்துள்ள ஊரக வளர்ச்சித் துறை அலுவலகத்தில் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர் / ஊரக வளர்ச்சித் துறை (பயிற்சிகள்) இயக்குநர் ஜெனரல் திருமதி. ஜெயஸ்ரீ ரகுநந்தன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் Dr.K.கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயரதிகாரிகள் பங்கேற்றனர்.






மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் 29.07.2021 அன்று திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்த ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வுகளில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.எம்.கதிர் ஆனந்த், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் K.கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அமர் குஷாவா, இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. க. தேவராஜி, திரு. ஏ நல்லத்தம்பி, திரு. அ.செ.வில்வநாதன் மற்றும் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. மகேஷ்பாபு, திருப்பத்தூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. உமா மகேஷ்வரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சுய உதவிக் குழுக்கள் மேற்கொண்டு வரும் வாழ்வாதார நடவடிக்கைகள் பார்வையிடல்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.க.பொன்முடி அவர்களும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்களும் 22.07.2021 அன்று கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இந்நிகழ்வுகளின் போது ஊரக வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் Dr.K.கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பி.என். ஸ்ரீதர், இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் 14.07.2021 அன்று தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்களால் நடத்தப்படும் சாய் அச்சக தொழிற்கூடத்தை பார்வையிட்டார்.

இந்நிகழ்வுகளின் போது, ஊரக வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் Dr.K.கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப.,, ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.எஸ்.கோபால சுந்தரராஜ், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

# சுய உதவிக் குழுக்கள் மேற்கொண்டு வரும் வாழ்வாதார நடவடிக்கைகள் பார்வையிடல்



மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள், 15.07.2021 அன்று திருநெல்வேலி மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் செயல்பட்டு வரும் நகர்ப்புற வாழ்வாதார மையத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்களைப் பார்வையிட்டு சுயஉதவிக் குழுவினருடன் கலந்துரையாடினார்.

இந்நிகழ்வுகளின்போது ஊரக வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் Dr.K.கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு வி. விஷ்ணு, இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், கரசங்கால் ஊராட்சி மற்றும் செரப்பணஞ்சேரி ஊராட்சிகளிலும் மற்றும் வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம், ஊத்துக்காடு ஊராட்சியிலும் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்களும் மற்றும் மாண்புமிகு ஊரக தொழிற்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்களும் மகளிர் சுயஉதவிக்குழுக்களின் செயல்பாடுகளை நேரில் பார்வையிட்டு கள ஆய்வு மேற்கொண்டனர்.

இந்நிகழ்ச்சிகளில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் மா. ஆர்த்தி, இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கு. செல்வப்பெருந்தகை, திரு.க.சுந்தர், திரு.சி.வி.எம்.பி.எழிலரசன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.பி.ஜெயசுதா, ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட அலுவலர் திரு. ஸ்ரீனிவாச ராவ் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சுய உதவிக் குழுக்கள் மேற்கொண்டு வரும் வாழ்வாதார நடவடிக்கைகள் பார்வையிடல்



மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களும் மற்றும் மாண்புமிகு ஊரக தொழிற்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்களும் 31.07.2021 அன்று செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், சிங்கபெருமாள் கோயில் பகுதியில் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழு மையத்தில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுலா தகவல் மையத்தினை துவக்கி வைத்து அங்கு செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்களின் சந்தை, விடுதி கட்டிடம் மற்றும் உணவு தயாரிக்கும் மையங்களைப் பார்வையிட்டு கள ஆய்வு செய்தனர்.

இந்நிகழ்வுகளில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஜி. செல்வம், ஊரக வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் K.கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆ.ர.ராகுல்நாத், இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி. எம். வரலட்சுமி மதுசூதனன், திரு. எஸ்.அரவிந்த் ரமேஷ் மற்றும் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. செல்வம், ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.






# சுய உதவிக் குழுக்கள் மேற்கொண்டு வரும் வாழ்வாதார நடவடிக்கைகள் பார்வையிடல்



மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் 29.07.2021 அன்று திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியம், மண்டலவாடி ஊராட்சி, மூர்த்தியூரில் செயல்பட்டு வரும் மலர்கள் மகளிர் சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பாய் பொருட்களைப் பார்வையிட்டார்.

இந்நிகழ்வுகளில், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.எம்.கதிர் ஆனந்த், ஊரக வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் K.கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அமர் குஷாவா, இ.ஆ.ப., சட்ட மன்ற உறுப்பினர்கள், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. மகேஷ்பாபு, திருப்பத்தூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. உமா மகேஷ்வரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் 28.07.2021 அன்று வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் அமைக்கப்பட்டிருந்த சுய உதவிக் குழுக்கள் தயாரித்தப் பொருட்களின் கண்காட்சியைப் பார்வையிட்டார். தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருகம்பத்தூர் ஊராட்சியில் செயல்பட்டு வரும் சக்தி மகளிர் சுய உதவிக் குழுவின் மண்புழு உரம் தயாரிப்பு மையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்து அங்குள்ள பணியாளர்களுக்கு சீருடைகளை வழங்கினார்.

இந்நிகழ்வுகளின் போது, வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. T.M.கதிர் ஆனந்த், ஊரக வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் K.கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பெ.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஏ.பி.நந்தகுமார், திரு. ப.கார்த்திகேயன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# சுய உதவிக் குழுக்கள் மேற்கொண்டு வரும் வாழ்வாதார நடவடிக்கைகள் பார்வையிடல்



மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்கள், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே.எஸ். மஸ்தான் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் ஆகியோர் விழுப்புரம் மாவட்டம், காணை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கஞ்சனூர் ஊராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுவினரால் உற்பத்தி செய்யப்படும் டெரகோட்டா மற்றும் கைவினைப் பொருட்களைப் பார்வையிட்டனர்.

இந்நிகழ்வுகளின் போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் K.கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. த. மோகன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. பூ.காஞ்சனா, மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. லலிதா மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்களும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் ஆர்.காந்தி அவர்களும் 30.07.2021 அன்று ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த சுய உதவிக் குழுக்கள் தயாரித்தப் பொருட்களின் அரங்கினைப் பார்வையிட்டனர்.

இந்நிகழ்வுகளின் போது, ஊரக வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் K. கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ.ஆர். கிளாட்ஸ்டோன் புஷ்பராஜ், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர், ராணிப்பேட்டை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குதல்



திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் 15.07.2021 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் திரு. எம். அப்பாவு அவர்களும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்களும் இணைந்து மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

இந்நிகழ்வுகளின் போது, ஊரக வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் Dr.K.கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு வி. விஷ்ணு, இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்




காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஊரக தொழிற்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் ஆகியோர் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நேரடி வங்கிக் கடன், சமுதாய முதலீட்டு நிதியுதவி, சுயநிதி வழங்கும் திட்டத்தின் கீழ் கடனுதவி, நலிவுற்றோர் நிதியுதவி, தனிநபர் தொழில் முனைவோருக்கான நிதி உதவி ஆகியவற்றை வழங்கினர்.

இந்நிகழ்ச்சிகளில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் மா. ஆர்த்தி, இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர், ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட அலுவலர் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குதல்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க **31.07.2021** அன்று செங்கல்பட்டு மாவட்டத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களும், மாண்புமிகு ஊரக தொழிற்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்களும் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு வங்கிக் கடன் மற்றும் அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினர்.

இந்நிகழ்வுகளின் போது, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஜி. செல்வம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் K. கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆ.ர.ராகுல்நாத், இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. செல்வம், செங்கல்பட்டு மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் **29.07.2021** அன்று திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியின் போது, சுய உதவிக் குழு மகளிருக்கு கடனுதவி மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்வுகளின் போது, வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.எம்.கதிர் ஆனந்த், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் K. கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அமர் குஷாவா, இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குதல்




மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் 28.07.2021 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்வுகளின் போது, வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. T.M. கதிர் ஆனந்த், ஊரக வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் K. கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பெ.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.




மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்களும் 30.07.2021 அன்று ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியின் போது, பல்வேறு பயனாளிகளுக்கு ரூ. 10 கோடியே 60 லட்சத்து 44 ஆயிரம் மதிப்பிலான கடனுதவி மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்வுகளில் ஊரக வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் K. கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ.ஆர். கிளாட்ஸ்டோன் புஷ்பராஜ், இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர், ராணிப்பேட்டை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்ட கோவிட்-19 சிறப்பு பணிக்கான பாராட்டுச் சான்றிதழ்




15.08.2021 அன்று சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திர திருநாள் விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுடன், கோவிட்–19 தடுப்பு பணிக்கான சிறப்பு பதக்கங்களையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் பெற்றவர்கள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கோவிட்–19 தடுப்பு பணிக்கான சிறப்பு பதக்கங்கள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை ஊரக வளர்ச்சித்துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கினார்.

# மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்




மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் 09.08.2021 மற்றும் 10.08.2021 ஆகிய தேதிகளில் சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திருப்பத்தூர், காரைக்குடி, சிவகங்கை, மானாமதுரை ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி, அமுதசுரபி நிதி, வறுமை குறைப்பு நிதி, தனிநபர் கடன், வங்கிக் கடன் இணைப்பு, இலங்கை அகதிகள் முகாமை சார்ந்த சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி, விவசாய சார்ந்த பொருள்கள் மற்றும் இயந்திரங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு சிறிய அளவிலான விவசாய கருவிகள் வழங்குதல் ஆகிய நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

# மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத் திட்ட உதவிகள் மற்றும் இருசக்கர வாகன மானியம் வழங்குதல்




தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. கனிமொழி அவர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 10 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதியாக ரூ.1,50,000/–மும், சுரைக்காய்ப்பட்டி ஊராட்சி குளத்துவாய்ப்பட்டி குக்கிராமத்தில் உள்ள இலங்கை அகதிகள் முகாம் நட்சத்திர மகளிர் சுய உதவிக் குழுவிற்கு சமுதாய முதலீட்டு நிதியாக ரூ.50,000/–மும், பணிபுரியும் மகளிரின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் மகளிர் திட்டம் சார்பாக இருசக்கர வாகன திட்டத்தின் கீழ் வீதம் 30 பயனாளிகளுக்கு மானியத் தொகையாக ரூ.7,50,000/–மும் வழங்கி விழா பேருரையாற்றினார்.

இவ்விழாவில் மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. கீதா ஜீவன் அவர்கள், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் டாக்டர். கி. செந்தில்ராஜ், இ.ஆ.ப, ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு.வே.பிச்சை, உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இளம் வயது திருமணம் குறித்து கலை நிகழ்ச்சி மூலம் மலை கிராம மக்களுக்கு விழிப்புணர்வு

கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஒன்றியம், பெட்டமுகிலாளம் ஊராட்சி காமகிரி மலை கிராமத்தில் இளம் வயது திருமணம் குறித்த விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் வி. ஜெயச்சந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு சு.ஈஸ்வரன், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர் உள்ளிட்ட பல்வேறு அரசு துறை அலுவலர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



# கொரோனா தடுப்பு விழிப்புணர்வு




திருவண்ணாமலை மாவட்டம், வேங்கிக்கால் ஊராட்சியில் 05.08.2021 அன்று மெகா கோலம் போடுதல், கபசுர குடிநீர் வழங்குதல் மற்றும் கையெழுத்து இயக்கம் நடத்துதல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து, விழாப்பேருரையாற்றி, கொரோனா விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வரையப்பட்டிருந்த மெகா கோலத்தைப் பார்வையிட்டு, பொதுமக்களுக்கு கபசுர குடிநீர் வழங்கினார்.

மேலும், கொரோனா விழிப்புணர்வு குறித்த குறும்படம் திரையிடுதல், விழிப்புணர்வு யோகா செய்முறை விளக்கம் மற்றும் கொரோனா தடுப்பு குறித்த உடல்மொழி விளக்கம் போன்ற நிகழ்வுகளைப் பார்வையிட்டு, விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தில் கையெழுத்திட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.முருகேஷ், இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. மு.பிரதாப், இ.ஆ.ப., துணை ஆட்சியர் செல்வி. அஜிதா பேகம், கோட்டாட்சியர் திரு. வெற்றிவேல் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் திருமதி. பெ.சந்திரா, உதவித் திட்ட அலுவலர்கள், சமுதாய அமைப்பாளர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# கொரோனா விழிப்புணர்வு கோலங்கள்



திருவண்ணாமலை மாவட்டம், வேங்கிக்கால் ஊராட்சியில் உள்ள அறிவியல் பூங்காவில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களைக் கொண்டு 03.08.2021 அன்று கொரோனா விழிப்புணர்வு கோலங்கள் போடப்பட்டன.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.முருகேஷ், இ.ஆ.ப., அவர்கள் விழிப்புணர்வு கோலங்களைப் பார்வையிட்டு விழாப் பேருரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. மு.பிரதாப், இ.ஆ.ப., துணை ஆட்சியர் செல்வி. அஜிதா பேகம், ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் திருமதி. பெ.சந்திரா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள், களப்பகுதி வழிநடத்துனர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பழங்குடியினர் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்குதல்




நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை வட்டாரத்தில், பழங்குடியினர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி மூலம் கடனுதவி வழங்கும் நிகழ்ச்சி 29.07.21 அன்று நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி. ஸ்ரேயா பி. சிங், இ.ஆ.ப., மற்றும் சேந்தமங்கலம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் 35 பழங்குடியின மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 1.63 கோடி வங்கிக் கடனாக வழங்கப்பட்டது. மேலும் பிரதம மந்திரியின் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்திருந்த நபரின் குடும்பத்தினருக்கு காப்பீடு தொகையாக ரூ. 2 இலட்சம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. மா.பிரியா, இந்தியன் வங்கி மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.வி.சதீஷ்குமார், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# மகளிர் சுய உதவிக்குழு உற்பத்தி பொருட்கள் ஆய்வு

அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., அவர்கள், செந்துறை ஒன்றியம், சிறுகடம்பூர் ஊராட்சியில் செயல்படும் பனை ஓலை கைவினை உற்பத்தியாளர் சுய உதவிக் குழுவின் செயல்பாடுகளை ஆய்வு செய்து, அக்குழுவினர் தயாரிக்கும் பனை ஓலைப் பொருட்களின் உற்பத்தியை பெருக்குவதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தருவதாகவும், பொருட்களை பாதுகாப்பாக வைப்பதற்கு கிடங்கு வசதியை ஏற்படுத்தித் தருவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து, உஞ்சினி ஊராட்சியில் தினக்கூலி அடிப்படையில் பட்டுப் புடவை நெய்து விற்பனை செய்து வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாட்டை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் உற்பத்தி செய்யும் பட்டு புடவைகளை விற்பனை செய்வதற்கு மாநில அளவில் புதிய விற்பனை மையம் மற்றும் அரியலூர் மாவட்டத்தின் குறியீடாக தர அடையாளம் (Brand Name) உருவாக்கிட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்ததுடன், 7 மகளிர் சுய உதவிக் குழுக்களை சேர்ந்த 56 நபர்களுக்கு ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு மூலம் குழு கடனாக ரூ.8,50,000/– வழங்கி, மூலப்பொருட்களை சொந்தமாக வாங்கி பட்டு புடவைகள் நெய்து விற்பனை செய்ய அறிவுரை வழங்கினார்கள். இந்த ஆய்வின்போது அரியலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு.கு.செல்வராசு, உதவி திட்ட அலுவலர்கள், வட்டார இயக்க மேலாண்மை அலகு பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் ஆய்வுக் கூட்டம்



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் இரண்டாம் காலாண்டிற்கான மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் ஆய்வுக் கூட்டம், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் வி. ஜெயச்சந்திர பானுரெட்டி, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் 30.07.2021 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 2021–2022ஆம் ஆண்டிற்கான வருடாந்திர கடன் திட்ட அறிக்கையை வெளியிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், சுய வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் 3 இலட்சம் தொழில் கடன் மற்றும் மைக்ரோ சாட், இந்தியன் வங்கி மூலம் PMJJBY காப்பீட்டு திட்டத்தின் பயனாளிக்கு ரூ.2 இலட்சத்திற்கான காசோலையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. சு.ஈஸ்வரன், இந்திய வங்கியின் மண்டல மேலாளர் திரு.ஏ.பழனி, மாவட்ட தொழில் மைய மேலாளர் திரு.எஸ்.பிரசன்னா பாலமுருகன், நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் திரு.ஜெயபிரகாஷ், முன்னோடி வங்கி மேலாளர் திரு. ஆர். மகேந்திரன் மற்றும் வங்கிகளின் பிரதிநிதிகள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில் சுதந்திர தின விழாக் கொண்டாட்டம்



நம் நாட்டின் 75வது சுதந்திர தின விழா நாடெங்கிலும் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் அமைந்துள்ள, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழா நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், இணை இயக்குநர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.





# தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், ஊரகப் புத்தாக்கத் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகள் ஆய்வு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், ஊரகப் புத்தாக்கத் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின் முதற்கட்டமாக செங்கல்பட்டு மாவட்டம், தண்டரை கிராமத்தில் ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் வழிகாட்டுதலின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இருளர் பழங்குடி பெண்கள் நலச் சங்கத்திற்கு வருகை தந்து, அங்கு மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் பொருட்கள், அதற்கான இயந்திரங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளைக் கேட்டறிந்த முதன்மை செயல் அலுவலர் அவர்கள், இக்குழுவின் தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கு கண்காட்சிகளை நடத்தவும், ஏற்றுமதிக்கு உரிய நடவடிக்கை எடுப்பது குறித்தும் ஆலோசனைகளை வழங்கினார். பின்னர், திருக்கழுக்குன்றம் வட்டம், குழிப்பந்தண்டலம் ஊராட்சியில் சிறப்புத் தொழில் மேற்கொள்ளும் சிறப்புக் கலைஞர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.



தொடர்ந்து காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஒன்றியம், ஊத்துக்காடு ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக சமுதாய முதலீட்டு நிதியாக தலா ரூ.50,000/– வீதம் 2 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கீழ் கோவிட்–19 சிறப்பு நிதி தொகுப்பாக தலா ரூ.50,000/– வீதம் 4 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் வழங்கப்பட்டது.

பின்னர் வாலாஜாபாத் ஒன்றியத்தில் உள்ள ஊத்துக்காடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் செயல்படுத்தப்படும் இயற்கை முறையிலான கீரை வளர்ப்பினை பார்வையிட்ட முதன்மை செயல் அலுவலர் அவர்கள், கூட்டமைப்பின் உறுப்பினர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டார்.

இந்த நிகழ்வுகளில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மா.ஆர்த்தி, இ.ஆ.ப., செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஏ.ஆர்.ராகுல்நாத், இ.ஆ.ப., ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கூடுதல் இயக்குநர் திரு. அருள்ஜோதி அரசன், இணை இயக்குநர் திருமதி. மதுமிதா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா, காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஜி. ஸ்ரீனிவாச ராவ், ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மாவட்ட செயல் அலுவலர் திரு. ம. தினகர் ராஜ்குமார் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள், ஆவின், தோட்டக்கலைத் துறை, வேளாண் துறை, மாவட்ட தொழில் மையம், விவசாய சந்தைத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை

தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல் இயக்குநர் திருமதி. பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள் விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், ஊரகப் புத்தாக்கத் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வில் நகர்ப்புற வாழ்வாதார மையம், உழவர் மையம் ஆகியவற்றை செயல் இயக்குநர் அவர்கள் பார்வையிட்டு, கள ஆய்வு செய்து, அப்பகுதிகளில் உள்ள தெருவோர வியாபாரிகள் மற்றும் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வு செய்தார். இந்நிகழ்வின் போது மேற்படி மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மாநில வல்லுநர் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



திருச்சிராப்பள்ளி



புதுக்கோட்டை

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

Empowering Lives

## வாழ்வில் முன்னேற்றம் தந்த வாழ்வாதார இயக்கம்



எனது பெயர் கன்னியம்மாள், நான் திண்டுக்கல் மாவட்டம், எரியோடு பேரூராட்சி, பாண்டியன் நகரில் வசித்து வருகிறேன். நானும் எனது கணவரும் கூலி வேலை செய்து எங்கள் குழந்தைகளை வளர்த்து வந்தோம். கடந்த 2016ஆம் ஆண்டு எரியோடு பேரூராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் துர்க்கை அம்மன் மகளிர் சுய உதவிக்குழு ஆரம்பிக்கப்பட்டது. அக்குழுவில் இணைந்ததன் மூலமாக எனக்கு முதல் கடன் இணைப்பாக ரூ.15000/– பெற்றுத் தந்தார்கள்.

பின்னர் உள்கடனாக ரூ.10,000/– பெற்று ஒரு தையல் இயந்திரம் வாங்கி சிறிய அளவில் கடை வைத்து துணிகள் தைத்துக் கொடுப்பதன் மூலம் தினமும் ரூ.250/– வரை வருவாய் கிடைக்கிறது. இதனால் எனக்கு தன்னம்பிக்கை வளர்ந்து என்னுடைய வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது. எனது முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்து, எனக்கு வாழ்வளித்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வாழ்வாதாரத்தை வளமாக்கிய வாழ்வாதார இயக்கம்



எனது பெயர் செல்வி, நான் விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் நகராட்சி பகுதியில் செயல்படும் செங்குவளை மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளேன். இக்குழுவானது முனீஸ்வரர் கோவில் தெருவில் உள்ள குடிசைப் பகுதியான சேடன் குட்டைப் பகுதியில் வசிக்கும் ஏழை மகளிரைக் கொண்டு 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் ஆரம்பிக்கப்பட்டது.

கணவரால் கைவிடப்பட்ட நான் குழுவில் தனி நபர் கடன் பெற்று பூக்கடை நடத்தி, அதில் கிடைக்கும் வருவாயில் எனது குடும்பத்தை நடத்தி வருகிறேன். வங்கியில் நேரடிக் கடனாக ரூ. 60,000/– பெற்று, எனது தொழிலை விரிவுபடுத்தியதன் மூலம் அதிக வருவாயும் பெற்று வருகிறேன். தெருவோர வியாபாரிகளுக்கான அடையாள அட்டையும் பெற்றுள்ளேன். தெருவோர வியாபாரிகளுக்கு வழங்கப்படும் பிரதம மந்திரி ஆத்ம நிர்பார் நிதி (PMSVANidhi) திட்டத்தின் மூலம் ரூ. 10,000/– கடன் பெற்று, அக்கடனை முறையாகத் திரும்பச் செலுத்தியும் வருகிறேன். எங்களைப் போன்ற எளியவர்களுக்கு கடன் உதவி வழங்கி, எங்களின் வாழ்வாதாரத்தை வளமுள்ளதாக மாற்றிவரும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவிய வாழ்வாதார இயக்கம்




தேனி மாவட்டம், தேவதானப்பட்டி பேரூராட்சி பகுதியில் செயல்படும் முத்தாலம்மன் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் கூறும்போது, "நாங்கள் கடந்த 5 வருடங்களாக மண்பானை தயாரிக்கும் தொழிலை செய்து வருகின்றோம். எங்கள் பகுதியைச் சேர்ந்த சமுதாய வளப் பயிற்றுனரும், சமுதாய அமைப்பாளரும், சுய உதவிக் குழு அமைத்தல் குறித்தும், அதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் குறித்தும் விளக்கிக் கூறினர். அதைத் தொடர்ந்து எங்கள் பகுதியில் மண்பானை தயாரிக்கும் தொழிலை செய்து வரும் 15 பெண்கள் ஒன்றிணைத்து 'முத்தாலம்மன் மகளிர் சுய உதவிக் குழுவினை' துவக்கினோம்.

குழு வரவு–செலவு கணக்குகளை முறையாகப் பராமரித்து வந்ததால் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் சுழல் நிதி மானியம் ரூ.10,000/– கிடைக்கப் பெற்றோம். அந்த மானியத் தொகையைக் கொண்டு பானை சுற்றும் சக்கர இயந்திரம் 5 வாங்கினோம். ஐசிஐசிஐ வங்கி மூலம் ரூ.1,30,000/– கடன் பெற்றோம். அந்தத் தொகையைக் கொண்டு மண் அரவை இயந்திரம் வாங்கி அதிகமான மண்பானைகளை தயாரித்து, அருகில் உள்ள ஊர்களில் விற்பனை செய்வதால், தற்போது வருவாய் அதிகரித்து, தினசரி எங்கள் குழுவிற்கு அதிக லாபம் கிடைக்கிறது. எங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களது குழுவின் சார்பாக உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்' என்று மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.

# நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றி



திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி பேரூராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ், ஸ்ரீ காளியம்மன் மகளிர் சுய உதவிக் குழு கடந்த 2018 முதல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்தக் குழுவில் உள்ள பெண்கள் ஒன்று சேர்ந்து வீடுகளின் மேல் தளத்தில் ஒட்டும் பூவேலைபாடுகள் கொண்ட சிமெண்ட் அட்டைகளை தயாரித்து விற்பனை செய்து வந்தனர். சிறிய அளவில் இந்த தொழிலை செய்து வந்ததால் குறைவான வருவாயே பெற்று வந்தனர். தங்களின் தொழிலை மேலும் விரிவுபடுத்திட வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் வங்கியில் நேரடிக் கடனாக ரூ. 5,00,000/– பெற்று, மூலப் பொருட்களைக் கொள்முதல் செய்து, அதிக அளவில் பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்து வருவதன் மூலம் கணிசமான அளவில் வருவாய் பெற்று வருகின்றனர்.

தங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வரும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு ஸ்ரீ காளியம்மன் மகளிர் சுய உதவிக் குழுவினர் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# மெழுகுவர்த்தி தொழிலால் கிடைத்த வெற்றி



விழுப்புரம் நகராட்சி, சேவியர் தெருவில் குழந்தை ஏசு மகளிர் மன்றம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வருகிறது. இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ள 15 பெண்களும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள். தங்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கூட்டுத் தொழில் செய்யலாம் என்று முடிவெடுத்தனர்.

இக்குழுவினர் தங்களின் பகுதியில் செயல்படும் இந்தியன் வங்கியில் சேமிப்புக் கணக்குத் தொடங்கி முறையாக சேமித்து வந்தனர். தங்களின் குழுவின் சார்பாக தொழில் தொடங்க கடன் வழங்க வேண்டி தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் வங்கியில் விண்ணப்பித்தனர். இவர்களின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு ரூ. 9,90,000/– கடன் வழங்கப்பட்டது. இந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு மெழுகுவர்த்தி தயாரிப்புத் தொழில் செய்யத் தேவையான மூலப் பொருட்களை வாங்கி, பல்வேறு வடிவங்களில் மெழுகுவர்த்திகளைத் தயாரித்து, கே.எஸ். கேண்டில் மகளிர் சுய உதவிக் குழு என்ற பெயரில் தேவாலயங்கள், உள்ளூர் மற்றும் வெளியூர்களில் உள்ள கடைகளில் விற்பனை செய்து நாளொன்றுக்கு ஒவ்வொரு நபரும் ரூ. 300/– வரை வருவாய் பெற்று வருகின்றனர். தங்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றம் அடையச் செய்திட உதவிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு குழந்தை ஏசு மகளிர் மன்றத்தின் உறுப்பினர்கள் நன்றி தெரிவித்துக் கொள்கின்றனர்.

## வாழ்வாதார முன்னேற்றம் தந்த இயக்கம்



தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி பேரூராட்சியில் வசித்து வரும் கணேசன் என்பவர் இரண்டு கால்களும் செயல்படாத மாற்றுத் திறனாளி ஆவார். ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த இவர் தான் வசிக்கும் பகுதியில் பூக்கடை ஒன்றை வைத்து, அதில் கிடைத்த வருவாயில் தன் குடும்பத்தை நடத்தி வந்தவருக்கு கொரோனா ஊரடங்கு காலங்கள் சோதனையை கொடுத்தது. தான் நடத்தி வந்த பூக்கடையை நடத்த முடியாததால் சாப்பாட்டுக்கே வழியில்லாமல் சிரமப்பட்டு வந்தார். வறுமையைப் போக்கும் வழி தெரியாமல் நின்றவருக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் வழிகாட்டியது. தெருவோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்திற்காக வழங்கப்பட்டு வரும் PMSIVANidhi திட்டத்தின் மூலம் கணேசனுக்கு தொழில் கடனாக ரூ.10,000/– பெற்றுத் தரப்பட்டது.

இந்தத் தொகையைக் கொண்டு கணேசன் உடன்குடி மெயின் ரோட்டில் சாலையோரத்தில் பூக்கடை வைத்து நாள் ஒன்றுக்கு ரூ.300/– வரை வருமானம் பெற்று வருகிறார். கணேசனின் வாழ்வாதாரம் முன்னேறியது. தற்போது மகிழ்ச்சியாக வாழ்ந்து வரும் கணேசன், வறுமையில் வாடிய காலத்தில் தனக்கு உதவி புரிந்த நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்.

## மகிழ்ச்சியான வாழ்வு தந்த இயக்கம்

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் நகராட்சி பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மகாலட்சுமி மகளிர் சுய உதவிக்குழு செயல்பட்டு வருகிறது இக்குழுவின் உறுப்பினர்களாக 12 பெண்கள் கைத்தறி பட்டு சேலை நெசவு தொழில் செய்து வருகின்றனர்.

இந்த சுய உதவிக் குழுவானது காங்கேயம் HDFC வங்கி கிளையில் சேமிப்புக் கணக்கினைத் துவங்கி சேமிப்பு செய்து வருகின்றனர். மேலும் வங்கியில் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் முதல் குழு கடன் பெற்று, அதனை தவணை தவறாது திரும்ப செலுத்தியதால் அதே வங்கியில் இரண்டாவது குழுக் கடனாக ரூ.4,60,000/– பெற்று நெசவுத் தொழிலை மேம்படுத்தி பட்டு சேலைகளை உற்பத்தி செய்து வருகின்றனர்.




மேலும் இக்குழுவினர் உற்பத்தி செய்யும் பட்டு சேலைகளை எவ்வித இடைத்தரகர்களும் இன்றி தங்களது முயற்சியினால் சென்னை சில்க்ஸ் போன்ற நிறுவனங்களுக்கு விற்பனை செய்து வருவதால் நிறைவான லாபம் பெற்று வரும் இவர்கள் தங்களது கடனையும் முறையாகத் திரும்ப செலுத்தி வருகின்றனர்.

## வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்கும் இயக்கம்



என் பெயர் செல்வராஜ், நான் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை, க.எண்.125, நாராயணன் தெரு என்ற முகவரியில் வசித்து வருகிறேன். என் குடும்பத்தில் என்னைத் தவிர வேறு யாரும் வருமானம் ஈட்டுவதில்லை. நான் ஊத்தங்கரை பேரூராட்சியின் எல்லைக்குட்பட்ட வார்டு எண்–1 பேரூராட்சி அலுவலகத்தின் முன்பு தள்ளுவண்டியில் துணிக்கடை வைத்துள்ளேன். கொரோனா காலத்தில் போதுமான வருமானம் இல்லாததால் நானும் எனது குடும்பத்தாரும் மிகவும் கஷ்டத்துக்குள்ளானோம். இந்நிலையில் PMSVANidhi திட்டத்தின் மூலமாக ரூ.10,000/–த்தை ஊத்தங்கரை கிளை ஸ்டேட் வங்கியில் கடனாகப் பெற்றேன். இந்தத் தொகையை முதலீடாகக் கொண்டு, பொருட்களை வாங்கி வியாபாரம் செய்து வருவாய் ஈட்டி வருகிறேன். தற்போது எனது வாழ்வாதாரம் முன்னேற்றம் அடைந்துள்ளது.

எங்களை போன்ற சாலையோர வியாபாரிகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து, எங்களின் மேம்பாட்டிற்காக அரும்பாடுபட்டு வரும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

முற்றக் கச்சேரி 2.0

# சாவித்திரி புலே முதியோர் சுய உதவிக் குழுவின் சிறப்பான செயல்பாடுகள்



சுய உதவிக் குழுவின் அலுவலகத்தில் ஊக்குனர் பாரதி அமர்ந்திருக்கிறார். அங்கு குழுவின் உறுப்பினர்களான கமலா மற்றும் தேவி ஆகியோர் வருகின்றனர்.

அன்புள்ள முற்றம் வாசகர்களே

சுய உதவிக் குழுவின் ஊக்குனர் மற்றும் உறுப்பினர்களிடையே நடைபெறும் உரையாடல்கள் மற்றும் கேள்வி பதில்கள் வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்த விபரங்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் முற்றக் கச்சேரி வெளியிடப்படுகிறது. இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறோம். இனி முற்றக் கச்சேரிக்குள் போவோமா...

பாரதி : வா... கமலா... வா... தேவி... எப்படி இருக்கீங்க ?

கமலா : நல்லா இருக்கோம் அக்கா... நீங்க ஏதோ குழுவை பார்வையிடப் போனீங்களே, அந்த வேலை முடிஞ்சிடுச்சா... ? எப்ப வந்தீங்க... ?

தேவி : எந்த ஊருக்கு அக்கா போனீங்க... ? எந்த குழுவைப் பாத்தீங்க... ?

பாரதி : கொஞ்சம் பொறுங்க... நான் ஊருக்கு போனது, அங்க பாத்தது எல்லாத்தையும் சொல்றேன், சரியா...

கமலா : சீக்கிரம் சொல்லுங்க அக்கா..

தேவி : ஏன் கமலா அவசரப்படுத்துற... அக்கா சொல்லுவாங்க...

பாரதி : முதியோர் சுய உதவிக் குழுவை பார்க்கப் போனேன்.

கமலா : முதியோர் சுய உதவிக் குழுவா ? இது என்ன அக்கா புதுசா இருக்கு ?

தேவி : முதியோருங்க கூடவா குழு வைச்சிருக்காங்க... அவங்களுக்கு எதுக்கு அக்கா சுய உதவிக் குழு... ? அந்தக் குழுவால யாருக்கு என்ன இலாபம் ? வயசாயிடுச்சின்னா வீட்டோட இருக்க வேண்டியது தானே... ? குழு அது இதுன்னு ஏன் சிரமப்படறாங்க... ?

பாரதி : என்ன இப்படி சொல்லிட்டீங்க... ? ஒவ்வொரு நாட்டுக்கும், வீட்டுக்கும் கிடைத்த வரப்பிரசாதமாக முதியோர்களை நாம நினைக்க வேண்டும். அவங்களோட அனுபவமும், ஆலோசனைகளும் நம்ம ஒவ்வொருவரின் வளர்ச்சிக்கும் மிக இன்றியமையாததாகும். இந்தியாவிலேயே நம்ம தமிழகத்தில் தான் அதிக அளவிலான முதியோர் உள்ளனர்.

தேவி : அது சரிக்கா... ஆனா அவங்களுக்கு எதுக்கு குழு... ?

பாரதி : வயசான காலத்துல முதியோர்கள் சந்தித்து வரும் பிரச்சனைகள் அதிகம். அதுல மிக முக்கியமான பிரச்சனை நிதிப் பாதுகாப்பின்மையாகும். இந்தப் பிரச்சனையிலிருந்து முதியோர்களைக் காக்கவும், அவங்களுக்கு நிதிப்பாதுகாப்பு ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடனும்தான் முதியோர் சுய உதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்படுது.

தேவி : அப்படியா... நீங்க எந்த ஊருல இருக்கிற குழுவப் பாத்தீங்க ?

பாரதி : திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டாரம், விளாகம் கிராமத்துல செயல்படுற சாவித்திரி புலே முதியோர் சுய உதவிக் குழுவைத் தான் பார்க்க போனேன்.

கமலா : இந்தக் குழுவை யார் வழிகாட்டுதலோட ஆரம்பிச்சிருக்காங்க...

பாரதி : நம்ம ஊரக வாழ்வாதார இயக்கத்தோட வழிகாட்டுதலில்தான் இந்தக் குழுவை 01.01.2019ல் அமைச்சிருக்காங்க...

தேவி : அந்தக் குழுவோட செயல்பாடுகள் எப்படி அக்கா இருக்கு ?

கமலா : இந்தக் குழுவுல எத்தனை பேர் உறுப்பினராக இருக்காங்க ?

பாரதி : இந்தக் குழுவுல மொத்தம் 10 பேர் உறுப்பினராக இருக்காங்க. திருவீழிமிழலை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில சேமிப்புக் கணக்கைத் துவங்கி, ஒவ்வொருவரும் மாத சேமிப்பாக 100/– ரூபாயும், சந்தாவாக 10/– ரூபாயும் செலுத்தி வந்தாங்க. 2021 ஜூலை மாதம் முதல் மாத சேமிப்பாக 200/– ரூபாய் சேமிக்க ஆரம்பிச்சிருக்காங்க.

தேவி : குழுவுக்கு வாழ்வாதார இயக்கம் மூலம் ஏதாவது கடனுதவி செஞ்சிருக்காங்களா ?

பாரதி : வாழ்வாதார இயக்கத்திலிருந்து ஆதார நிதியா ரூ.15,000/–மும், சமுதாய முதலீட்டு நிதியா ரூ. 50,000/–மும் கொடுத்திருக்காங்க. குழுவோட சேமிப்பா சுமார் 34,000/– ரூபாய் வரை இருக்கு. மேலும் சந்தா, வட்டி வரவு, ஆதார நிதி வரவு மற்றும் வங்கி வட்டி எல்லாம் சேர்த்து 82,748/– ரூபாய் இருக்கு.

கமலா : குழு உறுப்பினர்களுக்கு குழு மூலமாக கடனெல்லாம் தறாங்களா ?

பாரதி : ஆமாம். குழுவுல இருக்கிற ஒவ்வொரு உறுப்பினரும் கடன் வாங்கியிருக்காங்க. இதுவரை 1,85,000/– ரூபாய் வரை குழு மூலமாக உறுப்பினர்களுக்கு கடன் கொடுத்திருக்காங்க. கடன் வாங்கிய உறுப்பினர்கள் அதை முறையாக திரும்பவும் கட்டியிருக்காங்க.

தேவி : அந்த குழுவோட செயல்பாடுகள் எப்படி இருக்கு அக்கா ?

பாரதி : இந்த முதியோர் குழு சிறப்பா செயல்படுது. தொடர்ச்சியா கூட்டம் நடத்துவது, பதிவேடுகளைப் பராமரிப்பது, சந்தா வசூலிப்பது, வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்தறது ரொம்பவும் ஊக்கத்தோட இந்தக் குழு செயல்படுது. குறிப்பா இந்தக் குழுவின் ஊக்குனரான திருமதி. ராஜம்மாள் என்பவருக்கு 81 வயதாகிறது. பிரதிநிதியான திருமதி. சந்திரா என்பவருக்கு 72 வயதாகிறது. இந்த வயதிலும் இவங்க இருவரும் சுறுசுறுப்பா குழுவின் நடவடிக்கையில செயல்பட்டு வராங்க. இந்தக் குழுவின் சிறப்பான செயல்பாடு காரணமாக அந்தக் குழு சேமிப்புக் கணக்கு வைச்சிருக்கிற திருவீழிமிழலை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி செயலாளர் பாராட்டுச் சான்றிதழ்கூட வழங்கியிருக்கார்.

கமலா : அட ரொம்ப நல்லாயிருக்கே... வேற என்னவெல்லாம் இந்த முதியோர் சுய உதவிக் குழுவுல செய்யறாங்க அக்கா ?

பாரதி : விளாகம் கிராமத்துல நடக்குற அனைத்து நிகழ்ச்சிகளிலும் இந்த முதியோர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துக்கிறாங்க... ஊரின் வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குறாங்க... ஊரில் உள்ள இளைஞர்கள் அனைவரும் இந்தக் குழுவின் உறுப்பினர்களை மதிச்சு, அவங்க சொல்லும் ஆலோசனைகளை கேட்டு அதன்படி செயல்படறாங்க... முன்னேற்றம் அடைஞ்சி வராங்க.

கமலா : பரவாயில்லையே... முதியோர் சுய உதவிக் குழுவால இவ்வளவு நன்மையிருக்கா...

பாரதி : ஆமா. ஏன்னா முதியோர்கள் அனைவரும் நம்ம வளர்ச்சிக்கு வழிகாட்டியா இருப்பவங்க.

கமலா : எல்லா ஊருலயும் முதியோர் சுய உதவிக் குழு இருக்கா அக்கா... ?

பாரதி : அரசு ஆணையின்படி ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு சுய உதவிக் குழு ஊரக வாழ்வாதார இயக்கம் மூலமா ஆரம்பிக்கப்பட்டு இருக்கு.

கமலா : நம்ம தமிழ்நாட்டுல எவ்வளவு முதியோர் சுய உதவிக் குழுக்கள் இருக்கு அக்கா... ?

பாரதி : இதுவரைக்கும் தமிழ்நாட்டுல சுமார் 11,020 முதியோர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கு. இன்னும் குழுக்களை அமைச்சுக்கிட்டு இருக்காங்க.

தேவி : சரி அக்கா. முதியோர் சுய உதவிக் குழுவைப் பத்தி நிறைய செய்திகளை உங்க மூலமா நாங்க தெரிஞ்சிக்கிட்டோம். ரொம்ப சந்தோஷம் அக்கா...

கமலா : நம்ம ஊரிலயும் முதியோர் சுய உதவிக் குழு அமைக்கலாம் அக்கா.

பாரதி : கண்டிப்பா அமைக்கலாம் சரியா...

கமலா : சரி அக்கா. நேரம் ஆயிடுச்சி... நாங்க கிளம்பறோம்... வரட்டா அக்கா...

பாரதி : பார்த்து போயிட்டு வாங்க...

தேவி, கமலா இருவரும் பாரதியிடம் விடைபெற்று செல்கின்றனர்.

**(முற்றக் கச்சேரி தொடரும்)**

# மகளிர் குழுவால் மலர்ந்த "மகளிர் விடுதலை"

வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைப்போம் – என்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்!
பெண் விடுதலைக்கான பாரதியின் கனவுகளை
மகளிர் குழுக்களால் இணைந்த மகளிர்
ஒவ்வொரு நிலையிலும் உச்சம் தொட்டு
உலகிற்கே உணர்த்தி வருகின்றனராம் !

வீட்டுக்குள்ளே அடைந்திருந்த மகளிரை
அடுப்பறை தாண்டி அழைத்து வந்து,
அருகில் உள்ளோரை குழுவாய் சேர்த்து
சேமிக்க கற்றுத் தந்ததோடு
வங்கிகள் செல்லும் வாடிக்கையும்,
பதிவேடுகள் பராமரிக்கவும்
தீர்மானங்கள் இயற்றவும் என அனைத்து
முடிவுகளையும் தாமே எடுக்கும்
முழுசுதந்திரம் முதலில் வந்தது
மகளிர் குழுவினிலே!

தான் சேமித்த சிறு தொகைகளில்
புள்ளைகளின் கல்வி செலவுகளும்,
குடும்பத்தின் மருத்துவ செலவுகளோடு
கடன்களைப் பெற்று கணவர்களின்
வேளாண் மற்றும் தொழில்களுக்கு
உதவியதாலே உயர்ந்தது குடும்ப வருமானமே !

குழுவில் சேர்ந்த மகளிரெல்லாம்
அரசின் திட்டங்கள் அனைத்தும் அறிந்து
கல்வி, சுகாதாரம், மருத்துவத்திலும்
வீடுகள்தோறும் பட்டதாரிகள்,
வீடுகள்தோறும் தனிநபர் கழிவறை
கொரோனா பேரிடர் விழிப்புணர்வு என
சமூக முன்னேற்றத்திலும்
முக்கிய பங்களிக்கின்றனரே !

சேமிப்பு, கல்வி, சுகாதாரம் மட்டுமல்ல
மொத்த குடும்பத்தையும் குழுவாய் நடத்திட
தனக்கோர் தொழிலை தேர்ந்தெடுத்து
தொழில் முனைவோராய் ஏற்றம் பெற்று
வறுமையில்லா தேசத்தையும் வளர்த்தெடுக்கும்
மகளிர் குழுக்களை இவ்விடுதலை நாளில்
போற்றி வணங்கி மகிழ்வோம்!

– செந்தில் பலராமன், செயலர்,
தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும்
விற்பனை சங்கம்

# தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம்
## ( ஊரக வளர்ச்சித் துறை )

திரு. **பிரவீன் பி. நாயர்,** இ.ஆ.ப.,
உறுப்பினர் செயலர் / திட்ட இயக்குநர்

**ஜி. முத்து மீனாள்**
கூடுதல் இயக்குநர்

**ஆர். ரவிச்சந்திரன்**
தகவல் (ம) தொழில் நுட்ப மேலாளர்

## சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்களை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பார்வையிட்டனர்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் புதுப்பட்டினம் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பின் கீழ் செயல்படும் சுயம்பு சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களான 5 பெண்கள் சேர்ந்து, சமுத்திரம் மிதியடி வியாபார கூட்டுப் பொறுப்புக் குழுவாக இணைந்து, தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் மூலம் ரூ.2.50 இலட்சம் வங்கி கடன் பெற்று, பனை ஓலைப் பொருட்கள், செயற்கை நகைகள் மற்றும் மண்பாண்டங்கள் போன்றவற்றை தயாரித்து வருகின்றனர். கடந்த 31.07.2021 அன்று காட்டாங்குளத்தூர் ஊராட்சியிலுள்ள மகளிர் சுய உதவிக் குழு மைய கட்டிடத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த இக்குழுவின் தயாரிப்புப் பொருட்களை மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்களும், மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்களும் பார்வையிட்டனர்.

இந்நிகழ்வின் போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர் K. கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் உறுப்பினர் செயலர் / திட்ட இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



# தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் செயல்பாடுகளை கூடுதல் இயக்குநர் அவர்கள் ஆய்வு செய்தார்





தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் கூடுதல் இயக்குநர் திருமதி. முத்து மீனாள் மற்றும் கண்காணிப்பு (ம) மதிப்பீட்டு மேலாளர் திரு. செந்தில்குமார் ஆகியோர் திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் செயல் திட்டங்களை 06.08.2021 அன்று நேரில் பார்வையிட்டு கள ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வில் லைட்ஹவுஸ் குப்பம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகளுடன் கூட்டமைப்பின் செயல் திட்டங்கள் குறித்து கலந்துரையாடி, கூட்டமைப்பில் பராமரிக்கப்படும் அனைத்து பதிவேடுகளையும் ஆய்வு செய்தனர்.

இதனைத் தொடர்ந்து திருவள்ளூர் மாவட்ட மீனவ சங்கங்களின் கூட்டமைப்பின் (TDFSF) நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடி, திட்ட நிதியின் பரிமாற்றங்கள் மற்றும் பராமரிக்கப்படும் பதிவேடுகளை ஆய்வு செய்தார்கள். அதேபோல் திருவள்ளூர் மாவட்ட மீனவ சங்கங்களின் கூட்டமைப்பின் கீழ் செயல்பட்டு வரும் கூனாங்குப்பம் மீனவர் சங்க உறுப்பினர்களுடன் (Fish Marketing Society's Members) கலந்தாய்வு செய்து ஆலோசனைகள் வழங்கினார்.

மேலும், மூன்றாவது முறை கடன் பெற்று முழுமையாக திரும்ப செலுத்திவிட்டு, நான்காவது முறையாக கடன் பெற தயார் நிலையிலிருந்த கண்ணி மீன் கூட்டுப் பொறுப்பு குழுவிற்கு கூடுதல் இயக்குநர் அவர்கள் திருவள்ளூர் மாவட்டம் மீனவ சங்கங்களின் கூட்டமைப்பின் (TDFSF) நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் காசோலையாக வழங்கினார்.

இதை தொடர்ந்து பழவேற்காடு பகுதியில் மண்பாண்டம் தயாரிப்பு தொழில் செய்து வரும் ஸ்ரீமூக்குத்தியம்மன் கூட்டுப் பொறுப்பு குழுவின் உறுப்பினர்களுடன் திட்டம் குறித்து கலந்துரையாடி, பதிவேடுகளை ஆய்வு செய்தும், கூட்டுப் பொறுப்பு குழுவின் செயல்பாடுகளும் கூடுதல் இயக்குநர் அவர்களால் பார்வையிடப்பட்டது.

# மாவட்ட பணியாளர்களுக்கான ஆய்வு கூட்டம்



தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் உறுப்பினர் செயலர் / திட்ட இயக்குநரின் அனுமதிக்கிணங்க, கடந்த 19.07.2021 அன்று தனிமனித இடைவெளியை கடைபிடிக்கும் பொருட்டு, இரண்டு கட்டங்களாக கூடுதல் இயக்குநர் தலைமையில் மாவட்ட வாரியான திட்ட செயல்பாடுகள் குறித்து கண்காணிப்பு (ம) மதிப்பீட்டு அலுவலர்கள் மற்றும் கூட்டு வள மைய ஒருங்கிணைப்பாளர்களிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் செயற்பொறியாளர், நிதி மேலாளர், கண்காணிப்பு (ம) மதிப்பீட்டு மேலாளர் மற்றும் தகவல் (ம) தொழில்நுட்ப மேலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், கோவிட் பெருந்தொற்றை முன்னிட்டு திட்டப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு என்னென்ன தடுப்பு நடவடிக்கைகள் செய்யப்பட்டன எனவும், துயர் குறைப்பு நிதி மற்றும் வருமானத்தை பெருக்கும் நடவடிக்கைகளுக்கான நிதியிலிருந்து எத்தனை நபர்களுக்கு கடன் வழங்கப்பட்டது மற்றும் கடன் திருப்பம் பற்றியும் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், 26.07.2021 அன்று மாவட்ட மீனவ சங்க சம்மேளன முதன்மை நிர்வாகிகள் மற்றும் பண்ணை சார்ந்த நடவடிக்கைகளின் பங்குதாரர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. திட்ட செயல்பாடுகள், கோவிட் பெருந்தொற்றின் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் விவரங்கள் கேட்டறியப்பட்டு, இந்நடவடிக்கைகளை சிறப்பாக செயல்படுத்துவதற்கான அறிவுரைகள் வழங்கப்பட்டன.

## மீன் விற்பனை செய்யும் கூட்டு பொறுப்பு குழுக்கள்



தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் கீழ் செயல்பட்டு வரும் செங்கல்பட்டு மாவட்டம், பரமன்கேணி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் கீழ் செயல்படும் அறிவொளி மகளிர் சுய உதவிக் குழுவிலுள்ள 5 நபர்கள் சேர்ந்து நீலா மீன் வியாபாரம் செய்யும் கூட்டுப் பொறுப்புக் குழுவாக இணைந்து தமிழ்நாடு கிராம வங்கி மூலம் ரூ.1,42,500/– கடன் பெற்று, அதனுடன் பயனாளிகளின் பங்குத் தொகை ரூ.7,500/– சேர்த்து மொத்தம் ரூ.1,50,000/–த்தைக் கொண்டு தொழில் தொடங்கி நல்ல முறையில் செயல்பட்டு, தற்போது ரூ.98,000/– முதல் ரூ.1,20,000/– வரை மாத வருமானமாக பெற்று வருகின்றனர். இத்தொழிலில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு கடன் திருப்பம் முழுமையாக செலுத்தி உள்ளதாகவும் மேலும், குழந்தைகளின் கல்விக் கட்டணத்தையும் செலுத்தி வருவதாகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

## கூட்டு பொறுப்பு குழுவாக இணைந்து வாழ்வாதாரம் பெற்ற சுய உதவிக் குழு



புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் வட்டாரம், நாட்டாணிபுரசக்குடி ஊராட்சி, கோபாலபட்டிணம் மீனவ கிராமத்தை சேர்ந்த பாரதி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் ஒன்றாக சேர்ந்து இடியாப்பம் தயார் செய்து வீடுகளுக்கு விற்பனை செய்து வந்தனர். அவர்களை ஒருங்கிணைத்து கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் மூலம் 5 பேர் கொண்ட கூட்டுப் பொறுப்பு குழுவாக இணைத்து, இந்தியன் வங்கி மூலம் ரூ.1,25,000/– கடனுதவி பெற்று அருகிலுள்ள ஊராட்சிகளில் உள்ள பெரிய உணவகங்கள், திருமணம் மற்றும் சுபநிகழ்ச்சிகளுக்கு மொத்தமாக விநியோகம் செய்து வருகின்றனர். தற்போது உணவகங்கள், சொந்த கிராமத்தில் உள்ள வீடுகள் மற்றும் சுபநிகழ்ச்சிகள் என தேவை அதிகரித்துள்ளதால் முழு நேரமாக இடியாப்பம் உற்பத்தி செய்து, விற்பனையின் மூலம் நல்ல இலாபம் ஈட்டி வருகின்றனர். மேலும் வங்கி மூலம் பெற்ற கடனையும் எந்த தொய்வுமின்றி திருப்பம் செய்து வருகின்றனர்.

தங்களை ஒருங்கிணைத்து கடனுதவி பெற்று தந்து தங்களின் வியாபாரத்தை விரிவுபடுத்த உதவிய தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் மற்றும் நாட்டாணிபுரசக்குடி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## சலவைத் தொழில் கூட்டு பொறுப்பு குழு



நாகப்பட்டினம் மாவட்டம், தெற்குபொய்கைநல்லூர் ஊராட்சியில் தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் வழிகாட்டுதலில் ராணி, அமுதவள்ளி, வசந்தா, விஜயகுமாரி, கமலம் ஆகிய 5 பயனாளிகள் தங்களது வீட்டின் அருகில் உள்ளவர்களின் துணிகளை சலவை செய்து வந்துள்ளனர். இவர்கள் ஐந்து பேரும் இணைந்து கூட்டுப் பொறுப்புக் குழு அமைத்து, ரூ.1,90,000/– கடன் பெற்றனர். அந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு, 3 இஸ்திரி பெட்டிகள் மற்றும் தளவாட சாமான்களைக் கொள்முதல் செய்து, கடை ஒன்றினை வாடகைக்கு எடுத்து, சலவை நிலையம் அமைத்து பெரிய அளவில் சலவைத் தொழில் செய்து வருகிறார்கள். செய்து வரும் தொழிலை சிறப்பாக செய்வதால், வடக்குப் பொய்கைநல்லூர், தெற்குப் பொய்கை நல்லூர் ஆகிய ஊர்களிலிருந்தும், அருகில் உள்ள சுற்றுலாத் தலமான வேளாங்கண்ணியைச் சுற்றியுள்ள தங்கும் விடுதிகளிலிருந்தும் அதிகமான துணிகள் சலவை செய்ய தங்களுக்கு வருவதாகவும், இதன் மூலம் ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் ரூ.5000/– முதல் ரூ.8,000/– வரை வருமானம் கிடைப்பதாகவும் இக்குழுவின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றனர். இதுவரை ரூ.1,75,000/– கடன் தொகை திரும்ப செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

# தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

## இளைஞர்களின் கண் திறந்தோம் !
## தொழில் வாய்ப்பு திறன் தந்தோம் !!



விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டமும் (TNRTP), ஊரக சுய வேலை வாய்ப்புப் பயிற்சி நிறுவனமும் (RSETI) இணைந்து நடத்திய உலக இளைஞர் திறன் தின விழாவில், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் திரு D.மோகன், இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்று, தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் வழியாக அடையாளம் காணப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு, ஊரக சுய வேலை வாய்ப்புப் பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்படும் அலைபேசி செப்பனிடும் பயிற்சியையும், ஊரக சுய வேலை வாய்ப்புப் பயிற்சி நிறுவனத்தின் சந்தைக்கு வருகை புரிந்து, தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் மற்றும் ஊரக சுய வேலை வாய்ப்புப் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்ற இளைஞர்களால் தயாரிக்கப்பட்ட கைவினைப் பொருட்களின் விற்பனையையும் தொடங்கி வைத்துடன், ஊரக சுய வேலை வாய்ப்புப் பயிற்சி நிறுவனத்தில் Aari எம்பிராய்டரி பயிற்சி பெற்றுவரும் இளைஞர்களுடன் கலந்துரையாடினார்.

இந்நிகழ்வுகளில் துணை ஆட்சியர் (பயிற்சி), முன்னோடி வங்கி மேலாளர், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மாவட்ட செயல் அலுவலர், ஊரக சுய வேலை வாய்ப்புப் பயிற்சி நிறுவனத்தின் இயக்குநர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திட்டம் குறித்த பயிற்சி! புதிய வாழ்விற்கு ஒரு முயற்சி!



தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்திற்காக, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், 13.07.2021 அன்று ஒரு இணைய கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது. இக்கூட்டத்தில், தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO) செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்கள் பற்றியும், அவற்றை எவ்வாறு திட்டப் பயனாளிகள் பெற்றுக் கொள்வது என்பது குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

ஈரோடு மாவட்ட தாட்கோ பொது மேலாளர் திருமதி ஜி. ஜெயந்தி அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். விண்ணப்ப செயல்முறை குறித்த பல்வேறு கேள்விகளும், ஐயங்களும் திரு. ஏ. ஆனந்தமோகன், (தாட்கோ உதவியாளர்), அவர்களால் தெளிவுபடுத்தப்பட்டன. இந்த திட்டப் பகுதியிலுள்ள பட்டியல் இனத்தவர்களும் / பட்டியல் பழங்குடி இனத்தவர்களும், இந்த ஒன்றியத்தின் அனைத்துப் பணியாளர்களும், ஈரோடு மாவட்ட ஊரகப் புத்தாக்கத் திட்ட மேலாண்மை அலகின் அலுவலர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# பலவற்றை தைக்கிறோம்! பலமொன்றை படைக்கிறோம்!



என் பெயர் ரேவதி, நான் நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டாரம், வலையபட்டி ஊராட்சியில் கடந்த நான்கு வருடங்களாக தையல் கடையினை நடத்தி வருகின்றேன். 2020 கொரோனா பொது முடக்கத்தின் பொழுது, என் கடை மூடப்பட்டு அங்கு இருந்த எந்திரங்களை எனது வீட்டிற்குக் கொண்டு சென்று அங்கிருந்தபடியே பிளவுஸ், சுடிதார், புடவை ஓரம் தைத்தல் போன்ற சிறு சிறு வேலைகளை செய்து வந்தேன். ஆனால், இதிலிருந்து வந்த வருமானம் எனக்கு போதுமானதாக இல்லை.

கரூரில் இருந்த ஊராட்சி அலுவலர் ஒருவர், முகக்கவசங்கள் தைத்துக் கொடுக்க ஆட்கள் தேவை என கேட்டிருந்தார். எங்கள் குழுவிலுள்ள 10 பெண்களும் ஒன்றிணைந்து அந்த அலுவலரை அணுகினோம். அவரது குழுவினர் முகக்கவசம் தைக்கவும், அவற்றை மொத்தமாக பாக்கெட் கட்டுவதற்கும் கற்றுத் தந்தனர். நாளொன்றுக்கு 1000 முகக் கவசங்களை தைத்துக் கொடுத்தோம். இதனை ஒரு முழுநேர தொழிலாக சொந்தமாகச் செய்ய விரும்பினேன். எனது குழுவில் இந்த ஆர்வத்தை வெளிப்படுத்திய போது, கிட்டத்தட்ட ஏழு பெண்கள் என்னோடு இணைந்து கொண்டனர்.

இந்த நேரத்தில்தான், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கடனுதவித் திட்டம் பற்றி தெரிய வந்தது. கடன் கேட்டு விண்ணப்பித்த ஒரு சில வாரங்களுக்குள்ளேயே 1.5 லட்சம் நிதியுதவி பெற்றோம். அத்தொகையைக் கொண்டு மேலும் இயந்திரங்களை வாங்கி, “ஸ்ரீசாய் கார்மெண்ட்ஸ்” என்ற பெயரில் நிறுவனத்தை தொடங்கினோம். தற்போது கரூரிலுள்ள ஆலை உரிமையாளரிட மிருந்து ஆர்டர் பெற்று, தலையணை உறைகள், டவல்கள், திரைத் துணிகள், சணல் பைகள் முதலியவற்றை தயாரித்து வருகிறோம். தைக்கும் துணியின் அடிப்படையில் எங்களுக்கு கூலி வழங்கப்படுவதால், ஒவ்வொருவரும் ஒரு நாளைக்கு ரூ. 200/– வரை வருவாய் கிடைக்கிறது.

தையல் தொழிலில் துணிகளைத் சீராகவும், தரமாகவும் தைக்க வேண்டும். இல்லையேல் தைக்கப்பட்ட துணிகளை வேண்டாமென நிராகரித்து விடுவார்கள். எனவே, எங்களுக்கு துணிகள் கொள்முதல், தேவைப்படும் மூலப்பொருளின் அளவு, துணிகளை வெட்டும் முறை, விற்பனைச் சந்தை ஆகியவற்றில் பயிற்சிகள் தேவைப்படுவதால், எங்களுக்குப் பயிற்சி வேண்டி தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்ட அலுவலர்களிடம் தெரிவித்துள்ளோம். அவர்களும் எங்களுக்கான பயிற்சிகளை வழங்கிட ஒப்புக் கொண்டுள்ளனர். விரைவில் நாங்கள் சிறப்பாக எங்கள் தொழிலை மேற்கொள்வோம் என கூறிக் கொள்கிறோம்.

# உழைப்பில் வளர்ந்த கடை! கற்றலில் உயர்ந்த வளம்!

திண்டுக்கல் மாவட்டம், குயிலாம்பாறை வட்டாரம், வடுகம்பாடி ஊராட்சியில் வசித்து வரும் எனது பெயர் ராணி, நான் எங்கள் பகுதியில் சுமார் 17 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சிறிய தேநீர் கடையைத் தொடங்கி நடத்தி வந்தேன். அதில் கிடைத்த வருமானத்தைக் கொண்டு 7 ஆண்டுகளுக்கு முன்பு மதன்மோகன் மளிகைக் கடை என்ற பெயரில் பலசரக்கு கடையாக மேம்படுத்தினேன். எல்லோரையும் போலவே என் வாழ்வாதாரமும் 2020 பொது முடக்கத்தின் பொழுது வீழ்ச்சி கண்டது. எந்த வருமானமும் இல்லை. ஊரடங்கு தளர்த்தப்பட்ட பிறகும் கடையைத் திறக்க என் கையில் பணம் இல்லை.

எங்கள் கிராமத்தில் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் ரூபாய் 45,000 கடன் பெற்று, அரிசி மூட்டைகள், சர்க்கரை மூட்டைகள் மற்றும் இதர மளிகை பொருட்கள், குளியல் சோப்புகள், சலவை சோப்புகள் மற்றும் கிளீனிங் பொருட்களையும் வாங்கி இருப்பு வைத்து விற்பனை செய்து, தற்போது மாதம் 12,000 – 15,000 ரூபாய் வரை சம்பாதிக்கிறேன். வாங்கிய கடனையும் ஒழுங்காக செலுத்தி வருகிறேன். குறைந்த விலையில் தரமான பொருட்களை பேரம் பேசி வாங்கக் கற்றுக் கொண்டேன். பண்டக சாலை கிடங்குகளுக்கு நேரடியாகச் சென்று பொருட்களை கொள்முதல்



செய்து வருகிறேன். மேலும் முறுக்கு, அப்பளம் போன்றவற்றையும் நானே சொந்தமாக தயாரித்து என் கடையில் விற்பனை செய்கிறேன். இவையெல்லாம் என் வருமானத்தில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளன. என் கடையை ஒவ்வொரு நாளும் நல்ல லாபத்தில் நடத்தி வருகிறேன். என் தொழில் வளத்தில் நான் தன்னம்பிக்கையுடன் வளர்ந்து வருகிறேன்.

# அழகழகான மீன் வளர்ப்பு! ஆற்றல்மிகு இளைஞர்களுக்கு பயிற்றுவிப்பு!



உலக இளைஞர் திறன் தினத்தை முன்னிட்டு, தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் வழிகாட்டுதலில் தூத்துக்குடி மாவட்டம், சேர்வைக்காரன்மடம் ஊராட்சியில் அழகு மீன் வளர்ப்புக்கான ஒருநாள் பயிற்சி நடைபெற்றது. இதில் கருங்குளம் வட்டாரத்திலிருந்து 30 பெண் தொழில் முனைவோர்கள் பங்கு பெற்றனர். சித்தா அக்யூவா கார்டனின் உரிமையாளர் திரு. ஜி. சரவணன் அவர்களால், இந்த மாவட்டத்தின், சமுதாய திறன் பள்ளி வழியாக இளைஞர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. இந்தப் பயிற்சிகளின் மூலம் திறன் பெறும் இளைஞர்கள் தொழில் துறையில் மீன் வளர்ப்பை பெருக்குவதுடன், நாட்டிற்குத் தேவையான மீன் வகைகளை பாதுகாப்பார்கள். மேலும் சுயசார்பாக தொழில் வளமும், பொருளாதார மேம்பாடு அடைவார்கள்.

# குழுவின் புதிய தொழில்! சுவையில் புதிய வளம்!

என் பெயர் லதா, தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டாரம், சரத்துப்பட்டி ஊராட்சியில் வசித்து வரும் நான் எங்கள் பகுதியில் கடந்த மூன்று ஆண்டுகளாக பால் வியாபாரம் செய்து வருகிறேன். 2020 கொரோனா பொது முடக்கத்தால் தற்காலிகமாக தொழிலை நிறுத்த நேர்ந்தது. கால்நடைத் தீவனம் விலை அதிகம் என்பதால், இதர தொழில்களை விட இதில் வருமானம் குறைவுதான். என் சுய உதவிக் குழுவிலுள்ள இதர உறுப்பினர்களும் இதே சிக்கலைத்தான் சந்தித்து வந்தனர். எங்களில் சிலர் அதிக வருமானம் ஈட்ட, கூலிக்கு வேலை செய்ய சென்றனர். இன்னொரு நிறுவனத்தில் வேலைக்கு செல்வதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை, சொந்தமாக தொழில் தொடங்க முடிவு செய்தோம்.

இந்த யோசனையுடன் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தை அணுகி, கடனுதவி பெற விண்ணப்பித்தோம். அவர்கள் 1.5 லட்சம் நிதியுதவி வழங்கினர். ஒரு வாடகை இடத்தில், மகா குயில் என்ற குழுவைத் தொடங்கிய நாங்கள் கால்நடைத் தீவனத்தையும், மசாலாப் பொடிகளையும் அரைக்க, இரண்டு அரவை எந்திரங்களை வாங்கினோம்.

விவசாயிகளிடமிருந்து நேரடியாக மூலப் பொருட்களை வாங்கி, அவற்றை அரைத்து பொடியைப் பாக்கெட் இடுகிறோம். விற்பனை அடிப்படையில் வருமானம் கிடைக்கிறது. கிடைக்கும் வருமானத்தை நாங்கள் சமமாகப் பிரித்துக் கொள்கிறோம். நானும் இன்னொரு பெண்ணும் பொருட்களை கொள்முதல் செய்யும் பொறுப்பில் இருக்கிறோம். ஆகவே பேரம் பேசுதலில் என் தன்னம்பிக்கை மேம்பட்டுள்ளது. இப்போது எல்லா செலவும் போக மாதம் 4000 – 5000 ரூபாய் லாபம் ஈட்டுகிறோம். புதிய தொழிற்குழுவைத் துவங்கி நடத்தியதில் இந்த லாபம் கிடைத்துள்ளது. சிறு சிறு லாபங்கள் வளமான வாழ்வை ஒன்றிணைக்கும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளோம்.



# தேன் சுவையும்! மேம்பட்ட வளமும்!



தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கிருஷ்ணகிரி மாவட்டச் செயலாக்க அலகு ஒரு புதிய திறன் மேம்பாட்டுப் பயிற்சியை ஏற்பாடு செய்திருந்தது, இந்த பயிற்சி தேனடைத் தேன் உற்பத்தியாளர் குழுக்களின் உற்பத்தியினை மேம்படுத்துவதற்காக நடத்தப்பட்டது. இந்த மேம்பாட்டுப் பயிற்சியில் தேனை தரமாக உற்பத்திச் செய்வது, உற்பத்திச் செய்யப்படும் தேனின் ஊட்டச் சத்துகள் கெடாமல் பாதுகாப்பது, உயர் பாகுத் திறனை இழக்காமல், தூய்மையான தேனை அப்படியே சாப்பிடும் வகையில் தரமாக வைத்திருப்பது மற்றும் இயற்கையான முறையில் எந்த அளவுகளிலும், எந்த உழவரும் வளர்த்திடும் வகையில் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இந்த பயிற்சியின் வழிகாட்டுதலின்படி வளர்க்கப்படும் தேனை அப்படியே பயன்படுத்த முடியும். இதற்கு சந்தையில் அதிக மதிப்பும் வரவேற்பும் உள்ளது. 30 உழவர் உற்பத்தியாளர் குழுவினர் தங்களது தேனீ வளர்ப்பு முறை மற்றும் தேன்கூடு முறைகளைப் பயன்படுத்துவதில் தங்களது ஆர்வத்தை வெளிப்படுத்தினர். இதன் மூலம் உழவர் உற்பத்தியாளர் குழுவினர் தங்கள் வேளாண் தொழிலில் கூடுதல் உற்பத்தியையும், வளத்தையும் பெறுவார்கள்.

# 23-ம் ஆண்டில் வெற்றிநடை போடும் முற்றம்

- சுய உதவி குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!
- முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின் ஆதரவை தாருங்கள்!
- முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

**முற்றம் இதழின் சந்தா விபரம்**

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 200 |
| இரண்டு ஆண்டு | ரூ. 400 |
| மூன்று ஆண்டு | ரூ. 600 |

**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| அட்டையின் 2-வது பக்கம் | ரூ. 50,000 |
| அட்டையின் 3-வது பக்கம் | ரூ. 50,000 |
| அட்டையின் பின்பக்கம் | ரூ. 50,000 |
| புத்தகத்தின் உள்பக்கம் | ரூ. 35,000 |

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும். பரிசும் வழங்கப்படும்.

**விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:**
மேலாளர், முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம், 3வது மாடி,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.



Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd.,
Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029.
Published from (76,600 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,1
Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN